**செய்தி வெளியீடு எண்: 401** **நாள்: 21.06.2018**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

தமிழ்நாடு அரசுத் துறைகளின் பணியாளரமைப்பினை மதிப்பீடு செய்து அவசியமற்ற பணியிடங்களை கண்டறிதல், வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்தப் பணி அடிப்படையிலோ பணியமர்த்தலுக்கு வழிவகையுள்ள பணியிடங்களைக் கண்டறிதல் மற்றும் அரசுத் துறைகள் மற்றும் அரசு முகமைகளின் நிருவாகச் செலவின மேலாண்மை குறித்த பிரச்சினைகளை ஆய்வு செய்து அரசுக்கு உரிய பரிந்துரைகளை அளித்திட திரு.எஸ்.ஆதிசேஷய்யா, இ.ஆ.ப. (ஓய்வு), தமிழக அரசின் முன்னாள் முதன்மைச் செயலாளர் தலைமையில் பணியாளர் சீரமைப்புக் குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழு ஆலோசனைகளைப் பெறத் துவங்கியுள்ளது. பணியாளர் சீரமைப்புக் குழுவிற்கான ஆலோசனைகளை நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ அல்லது **src_2018@tn.gov.in என்ற** மின்னஞ்சலுக்கோ **30.06.2018** முன்பாக அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்குழு தொடர்பான விவரங்களை **www.tn.gov.in/src** என்ற இணையதளத்தில் காணலாம்.

**மு.அ.சித்திக், இ.ஆ.ப.,**
**உறுப்பினர் - செயலாளர்,**
**பணியாளர் சீரமைப்புக் குழு,**
**நிதித்துறை, தலைமைச் செயலகம்,**
**சென்னை - 600 009.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**